எட்டுத்தொகை அகநூல்களில் தலைவியின் மாண்புகள்

முனைவர் பட்ட ஆய்விற்குரிய (Ph.d) முன்ஆய்வுச் சுருக்கம் ஒப்படைப்பு

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

திருமதி த.திலகவதி

பதிவு எண் : 20PHTMF005

ஆய்வு நெறியாளர்

முனைவர் மு.கவிதா. எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641043.

ஜீலை - 2024

எட்டுத்தொகை அகநூல்களில் தலைவியின் மாண்புகள்

தொன்மையுடன் கூடிய மிக்கவளமை பொருந்திய சிறப்பான மொழி, செம்மொழியாம் தமிழ்மொழி. நவில்தொறும் இன்பத்தையும் கருத்தினையும் கற்பனை வளத்துடன் தந்துவிடும் ஆற்றலுடைய மொழி. உணர்ச்சிக்கும் உண்மைக்கும் ஆற்றல் சான்ற கருவியாய் சங்ககாலத்தில் பயின்று வந்த செம்மொழியான தமிழுக்கு அணிகலனாய் அமைந்தவை எட்டுத்தொகை. இந்நூலின் சிறப்பு அறம் காத்து நின்று, நெறிவழுவாத சமூகமரபைப் பெற்றிருந்ததாகும். சங்க காலச் சமூகத்தின் இயங்கியல் நிலையின் வெளிப்பாட்டினில், உண்மையின் சான்றாதாரமாக இருப்பது எட்டுத்தொகையாகும். அகம், புறம் சார்ந்து காணப்படும் இந்நூல், சங்ககால மக்களின் பண்பாட்டை, அறம் பொதிந்த வாழ்வியல் நிலைகளுடன் உள்ள தொடர்பை அன்பினைக் கொண்டு காட்டுகின்றது. காதல் வாழ்க்கையில், அறமிகு நல்ல தலைவனுடன் ஒழுகும் இல்லறத்தின் இனிமையும், இல்லற இனிமையில் இடைவேளையை ஏற்படுத்தித் தலைவனைப் பிரிக்கும் பிரிவின் கொடுமையைக் கண்டு கலங்கி நிற்கும் சங்க காலத் தலைவியின் மனத்தில் பல எண்ணங்கள் உள்ளன.

தலைவி களவு, கற்பு என்றிரு காலங்களில் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கிறாள். காதல் வயப்பட்டுக் களவு வாழ்க்கை தொடங்கிய பின்பு, மனத்தினுள் இனிமை கலந்த பயம் தோன்றியுள்ளது. தலைவிக்குக் களவுக்காலத்தை பிரிவின் போது, குறியிடம் பிழைத்தல், நிலவு வெளிப்பாடு, துஞ்சாமை, அலர், அம்பல் முகிழ்தல், வெறியாட்டு, இற்செறிப்பு, நொதுமலர், பரத்தமை, வரைவுவேண்டல் என்ற நிலைகளில் களவு வாழ்க்கை நிகழ்ந்துள்ளது. கற்புக் காலத்தில் ஏற்படும் எண்ணங்கள் களவுக் காலத்தைப் போன்று இல்லாமல், தலைவன் மீது சற்று உரிமையுடைய எண்ணங்களைக் காட்டப்படுகின்றது. கற்புக் காலத்தில் பிரிவு தரும் கொடுமையில், தலைவியால் ஏற்றுக்ளொள்ள முடியாத செயல் தலைவன் பரத்தமையுடன் தங்குதல் ஆகும். தலைவனின் அன்பு தனக்கு கிடைக்காமல் போவதால் தன்னுள்ளிருக்கும் மிகுந்த காதலை ஊடலாக வெளிப்படுத்துகின்றாள். கற்பென்னும் திண்மையுடன் வாழ்ந்திட்ட தலைவி களவு, கற்பு என்றிரு காலங்களில் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றாள். பழங்காலத்தில் ஒப்பனைக் கலை மிகவும் சிறந்து விளங்கியது. தமிழரின் அழகியல் உணர்ச்சியையும், கலைத்திறனையும், செல்வ வளத்தையும் புலப்படுத்துவது ஒப்பனையாகும். ஒப்பனையானது தலையிலிருந்து பாதம் வரை படிப்படியாகச் செய்வதாகும். இதில் ஆடை, அணிகலன்கள் அணிதல், கூந்தல் ஒப்பனை, மலர்சூடுதல், மாலையணிதல், முகவொப்பனை, நறுமணச்சாந்துகள், வண்ணப்பொடிகள் பூசிக்கொள்ளல் ஆகியன தலைவியின் ஒப்பனைக் கலையைக் குறிக்கின்றன. தலைவியின் வாழ்க்கை மரபுகளான பண்பாட்டு, பழக்கவழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள் ஆகியவை தலைவியின் அகம் சார்ந்த வாழ்வின் துணிச்சலைச் சங்க இலக்கிய எட்டுத்தொகை அகநூல்களின்வழி இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வுப் பொருள்

“**எட்டுத்தொகை அகநூல்களில் தலைவியின் மாண்புகள்**” என்னும் தலைப்பானது ஆய்வுப் பொருளாக எடுத்தாளப்பட்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

எட்டுத்தொகை அகநூல்களின் வழி தலைவியின் வாழ்வியலை அறிந்து கொள்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

கருதுகோள்

இன்றைய கால இல்லறவாழ்வில் கணவன் மனைவிக்கு இடையிலான உறவுதனில் அன்பின் மிகுதியும், உண்மையான காதலும் விட்டுக்கொடுத்துச் செல்கின்ற பக்குவமின்மையும், சரியான புரிதலில்லாமல் வாழ்கின்ற திறத்தையும் ஒரு சிறிய பிரச்சினைகளுக்காக கூட மனமுறிவு பெற்றுவிடுவதின் மூலம் அறியமுடிகின்றது. இளம் தலைமுறையினர் இவ்வாறின்றி, சங்ககாலத் தலைவியைப் போன்று களவுக்காலத்தில் ஏற்படுகின்ற பல்வேறு இன்னல்களைத் தாண்டி, கற்பு வாழ்க்கையில் நன்முறையில் பயணித்து, தலைவனுடன் அகமகிழ்ந்து ஏற்புடையனவற்றை பின்பற்றி வாழ்தல் வேண்டும் என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

“**எட்டுத்தொகை அகநூல்களில் தலைவியின் மாண்புகள்**” என்னும் தலைப்பில் அமையும் ஆய்விற்கு எல்லையாக எட்டுத்தொகையில் இடம்பெறும் அகநூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை, என்னும் ஐந்து நூல்களில் தலைவியின் பாடல்கள் மட்டும் ஆய்வு எல்லையாக அமைந்துள்ளன

ஆய்வு ஆதாரங்கள்

முதன்மைச் சான்றாதாரங்கள்

எட்டுத்தொகையில் இடம்பெறும் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்கள் முதன்மைச் சான்றாதரங்களாக அமைகின்றன.

துணைமைச் சான்றாதாரங்கள்

தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு போன்ற நூல்களும், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், திறனாய்வு நூல்கள், கருத்தரங்க ஆய்வுக் கோவைகள் ஆகியவை துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறைகள்

தலைவியின் எண்ணங்களை பகுத்துக் கூறுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையும், தோழி, செவிலி, தலைவன் இவர்களின் பண்புகளை விளக்கிக் கூறுவதால் விளக்கவியல் அணுகுமுறையும், தலைவியின் மாண்புகளை எடுத்துக் கூறுவதால் பெண்ணிய அணுகுமுறையும், தலைவியின் உளப்போராட்டங்களை எடுத்துரைப்பதால் உளவியல் அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வு முன்னோடிகள்

1. நூல்கள்
2. ஆய்வேடுகள்
3. ஆய்வுக்கட்டுரைகள் என மூன்று நிலைகளில் அமைகின்றன.

நூல்கள்

1. தமிம்க்காதல் - வ.சு.ப. மாணிக்கம்
2. சங்க கால மகளிர் - பாலசுப்பிரமணியன்
3. சங்க கால மகளிர் வாழ்வியல் - முனைவர் க.திலகவதி

ஆய்வேடுகள்

1. தொல்காப்பியத்தில் தலைவி – த.பாண்டியன் - 2007 – உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

2. சங்க இலக்கியத்தில் தலைவி பரத்தை ஆளுமை – டி.விஜி – மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

3. சங்க அக இலக்கியத்தில் தலைவியின் மனப்போராட்டங்கள் - அ.ஜான்சிராணி – பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

ஆய்வுக்கட்டுரைகள்

1. எட்டுத்தொகையில் கற்பு வாழ்க்கை – வெ.முத்துலட்சுமி -2018

2. முல்லைப்பாட்டின் வழி தலைவியின் பிரிவுத்துயர் - முனைவர்.பீ.பெரியசாமி - 2020

3. சங்க இலக்கியத்தில் பெண் வாயில்களின் ஆளுமைப்பண்புகள் - க.தனலட்சுமி – 2020.

ஆய்வுப் பகுப்பு முறை

எட்டுத்தொகை அகநூல்களில் தலைவியின் மாண்புகள் என்னும் இவ்வாய்வு முன்னுரை முடிவுரையோடு ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல் ஒன்று : தலைவி ஓர் அறிமுகம்

இயல் இரண்டு : களவு காலத்தில் தலைவி

இயல் மூன்று : கற்பு காலத்தில் தலைவி

இயல் நான்கு : தலைவியின் ஒப்பனைக் கலைத்திறன்

இயல் ஐந்து : வாழ்க்கை மரபுகள்

இயல் - 1

தலைவி ஓர் அறிமுகம் தலைவி

தலைவி

பண்டையச் சமூகத்தில் தலைவனுக்கு இணையாக வைத்து தலைவி மதிக்கப்பட்டாள். இவள் பெண்ணிற்கு அமைந்த பெருவனப்பும், நற்பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்றவள். தலைவி எப்பொழுதும் தலைவனுடன் இணைந்திருக்கும் நிலையையே விரும்புவாள். தலைவன் அருகில் இல்லாத காலங்களில் தோழியின் இணக்கம் தலைவிக்கு உற்றதுணையாக அமைகின்றது. கற்பு, காமம், ஒழுக்கம், பொறைநிறை, விருந்து, சுற்றம், ஓம்பல், புறன்தருதல் போன்றவையெல்லாம் தலைவிக்குரிய பண்புகளாக அமைகின்றது. கொடிச்சி, பெண்டிர் மனைக்கிழத்தி, குறவர்மகள், அதை நன்னீர்ராட்டி என்னும் பெயர்களால் தலைவி குறிக்கப்படுகின்றாள். தலைவியானவள் பெருஞ்செல்வச் சிறப்புமிக்க இடத்தில் தோன்றியவள் என்பதை,

"யாங்குஆகுவள் கொல் தானே

பெருமுதுசெல்வர் ஒருமடமகளே"(அகம் 310)

என்று கூறுகின்றது. அதுவும் பழமையாய் இருக்கும் செல்வர் குடியில் ஒருமகளாய் தோன்றியவள் தலைவி எனக் கூறப்படுகிறது.

தலைவியின் பிறப்பும் வளர்ச்சியும்

தலைவியின் பிறப்பைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடும் சங்கப்பாடல் எதுவும் இல்லை. தலைவியின் இளமைப் பருவத்தில் அவள் உடல் நலத்தை பேணுபவளாக செவிலியும், உள நலத்தைப் போற்றிக் காக்கின்றவள் தோழியாகத் திகழ்கின்றாள். தலைவி மிகவும் சிறுமியாக இருந்தபோது செல்லமாக வளர்க்கப் பெற்றாள். தலைவியின் தந்தைவீட்டில் செல்வவளமும், ஆடம்பரமான வசதியும், செல்வ செழிப்பும் உடையவளாகக் காணப்படுவதனை பாடல்கள் மூலம் அறியமுடிகின்றது. தலைவி, குழந்தைப் பருவத்தில் தன்னுடன் பிறந்தசகோதரன், சகோதரியுடன் விளையாடியதாக ஒருகுறிப்பும் காணப்படவில்லை. தலைவியைத் தன்னிகரற்றவளாகச் சிறப்பிக்க வேண்டும் என்னும் கருத்தால் இவ்வாறு புலவர்கள் குறிப்பிடாமையை புலநெறி இருந்திருப்பார் என்று க.திலகவதி அவர்கள் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியத்தில் தலைவி

சங்க காலத்தில் தலைவியைக் குறிக்கத் தலைமகள், தலைவி, கிழத்தி, கிழவி, ஆயிழை முதலிய பல சொற்களை வழங்கினர். தலைவி என்ற சொல்லே பொதுவாகக் கையாளப்படுகின்றது. பெண், பெண்மகள், மகள், பெண்டு, காதலி, கிழவி, கிழத்தி, கிழவோள், தாய், மலையோன், மனைவி எனத் தொல்காப்பியம் சுட்டும். இவற்றுள் தலைமகள், தலைவி எனும் சொற்கள் தனி கவனத்திற்குரியன. தொல்காப்பியர் தலைவியின் இயல்பு, வயது, ஒழுக்கம் ஆகியவற்றை கூறியுள்ளார்.

தலைவியின் இயல்பு

தொல்காப்பியம் தலைவியின் இயல்புகளாகக் குடிப்பிறப்பு, நல்லொழுக்கம், ஆள்வினைத் தன்மை, பருவம், வடிவம், அழுகை வாயிலாகக் கொண்டு நிகழும் அன்பு, உள்ளத்தை ஒருவழிப்படுத்துதல், அருள் உடையவராய் இருத்தல் முதலிய பத்து குணங்களிலும் தலைவி, தலைவனோடு ஒத்திருப்பாள

தலைவியின் வயது

தலைவியின் வயது குறித்து “பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி மலரைப் போன்றவள் தலைவி, என்னும் குறிப்பினால் பன்னிரண்டு ஆண்டு என்பது தலைவியின் வயதைக் குறிப்பதாகலாம்” என்று ஈ.கோ.பாஸ்கரதாஸ் அவர்கள் குறிப்பிடுகிறார்.

ஒழுக்கம்

தலைவி, தலைவனோடு கூடும் களவொழுக்கம் நான்குவகையாகக் கூறப்பட்டுள்ளது. அவை, இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியர் கூட்டம் என்பன. இது கைகோள் என்பதில் இடம்பெறுகிறது. கைகோள் என்பது ஒழுக்கலாறு. இன்ப ஒழுக்கம் பற்றியது.

ஐவகை நிலங்களில் தலைவி

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களிலும் வாழும் தலைவி, தலைவனுடன் இருக்கும்போது பெறப்படுகின்ற இன்ப நுகர்ச்சியும், இரவுக்குறியில் வரும் தலைவனுக்கு ஏற்படுகின்ற இடர்பாடுகளும், தன்னைவிட்டுப் பொருள்வயின் காரணமாக பிரியும் போது ஏற்படுகின்ற ஆற்றாமையும் வெளிக்காட்டப்படுகின்றது.

குறிஞ்சி நில தலைவி

குறிஞ்சி நிலத்தில் குறமகளிர் கணவரையே தெய்வமாகக் கொண்டு வணங்கி நிற்றலால், அப்பெண்ணின் கணவன்மார் தொடுத்த அம்புகள் இலக்குத் தப்பாமல் சென்றன என்று பெண்ணின் கற்பறம் போற்றப்படுகின்றது. களவுக் காதலனையே கற்புக் கணவனாகப் பெண்ணுக்கு அமைத்துக் கொடுக்காமல் நொதுமலர் வரைவு நிகழ்தல் அறமல்லாத செயல் என்று கருதினர். அவ்வாறு நிகழின் குறிஞ்சி நிலத்தில் வள்ளிக்கிழங்கு வீழாது, மலைமிசைத் தேன் சிறவாது, கொல்லையின் திணைக்கதிர் விளையாது என்று குன்றக்குரவர் நம்பினர். தலைவி தோழியோடு சொல்லாடுவதாக பாடல்கள் காணப்படுகின்றன. தலைவியானவள், தலைவனோடு கொண்ட நட்பிற்கு நிலம், வான், நீர் ஆகியன கூறப்பட்டுள்ளன. நீர், நிலம், வான் ஆகியவை வெவ்வேறாகப் பெருகி விளங்குவன. தலைமக்கள் நட்பு ஒரே இடத்தில் பெருகி விளங்குவது. இவை மூன்றும் போல் தலைவியினுடைய நட்பும் இயைந்த நட்பு என்பதை,

‘‘நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;

நீரினும் ஆர் அளவின்றே– சாரல்

கருங்காற் குறிஞ்சி பூக் கொண்டு

பெருந்தேன் இளைக்கும் நாடனொடு நட்பே’’ (குறு;பா;3;1-4)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

முல்லை நிலத் தலைவி

சங்க அக இலக்கியங்களில் முல்லைத் திணையில் தலைவி கூற்றுக்களாக பல பாடல்கள் காணப்படுகின்றன.தலைவி பருவம் கண்டுஆற்றாமல் தனக்குள்ளே கூறிக் கொள்ளுகிறாள் என்பதை

> **“ஆற்று அயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து**
>
> **எழுகுளிறு மிதித்த ஒரு பழம் போலக்**
>
> **குழைய, கொடியோர் நாவே,**
>
> **காதலர் அகல கல்லென்றவ்வே.” (குறுந் ;பா;24;3-6)**

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் எடுத்துரைக்கிறது. தலைவன் சொல்லிச் சென்றபருவம் வந்தும் வராமையால் தலைவி வருந்தினாள். ஏழு நண்டுகள் மிதித்த ஒருபழம் போலக் கொடியோர் நாவினால் கூறும் அலர்மொழிகளால் மேலும் மெலிவுற்றதாக கூறப்பட்டுள்ளது.

மருதநிலத் தலைவி

தலைவன் பரத்தையருடன் உறவாடத் தலைவியைப் பிரிந்திருந்தபொழுது தலைவி புணர்ச்சிவிரும்பி அது கிடைக்கப்பெறாமல் வருந்தினாள். அதனையறிந்த தோழி, தலைவன் கொடுமையை நினைத்து அவனை வெறுத்தலைவிடுத்து அவனைச் சேர விரும்புவது எதனால் என்று கேட்ட தோழியிடத்தில் தலைவி, பரத்தையரோடு குழவி மகிழ்தலும் ஆடவர்க்கு இயல்பானது ஆதலால் வருந்த வேண்டாம் என்று அறிவுறுத்திய தோழியிடம் தலைவி, புசிய புதர்களிடையே ஓங்கி வளர்ந்த வேழத்தின் வெண்மலர்கள் காற்றால் அசைவது வானவெளியில் பறக்கும் கொக்கிற்கு இணையாகவும், சிறப்பில்லாத பரத்தையர் உயர்ந்த குலமகளிர் போல தோற்றமளித்து மயக்குகின்றனர் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைவி தோழியுடன் சொல்லாடல் தலைவன் பரத்தையருடன் உறவாடத் தலைவியைப் பிரிந்திருந்தபொழுது தலைவி புணர்ச்சிவிரும்பி அது கிடைக்கப்பெறாமல் வருந்தினாள். அதனையறிந்த தோழி, தலைவன் கொடுமையை நினைத்து அவனை வெறுத்தலைவிடுத்து அவனைச் சேர விரும்புவது எதனால் என்று கேட்ட தோழியிடத்தில் தலைவி,

> **“கொடிப்பூ வேழம் தீண்ற, அயல**
>
> **புடிக் கொள் மாஅத்துவண் தளிர் நுடங்கும்**
>
> **அணித்துறை ஊரன் மார்பே**

பனித்துயில் கொள்ளும் இன்சாயற்றே.'' (ஐங் ;பா;14;1-4)

என்ற பாடலில் நீண்ட பூவினையுடைய வேழம் தீண்டுவதால் பிஞ்சுகளைக் கொண்ட மாந்தளிர் அசையும் என்பதில் பரத்தையரால் தலைவி மெலிவுற்றது கூறப்பட்டுள்ளது.

நெய்தல் நிலத்தலைவி

நெய்தல் நிலம் என்பது பண்டையத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்துவகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். கடலும் கடல் சார்ந்த இடங்களும் நெய்தல் என அழைக்கப்படுகின்றன. இங்கு வாழ்ந்த மக்கள் பரதவர், பரத்தையர், வலைஞர், உபணர், சேர்ப்பன், துறைவன், கொண்கன், நுளையர், நுளைச்சியர் என அழைக்கப்பட்டனர். இத்திணைக்குரிய உரிப்பொருள் இரங்கல், இவ்விரங்கலை மிகைப்படுத்த ஞாயிறு விழும் பொழுதாகிய ஏற்பாடு சிறுபொழுதாகும். மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்துக் குளித்தல், உப்புவாணிபம் செய்தல் போன்றவை இங்கு வாழ்ந்த மக்களின் முக்கியத் தொழிலாக அமைந்திருந்தன. பண்டமாற்று முறையே இந்நிலத்தில் நடைப்பெற்றதாக தெரிகின்றது. நெய்தல் நிலம் சார்ந்த முதல், கரு, உரிப்பொருள்களை தன் வாழ்விடமாகக் கொண்டு தலைவியானவள். வாழ்ந்துள்ளாள். நற்றிணையில் தலைவி தோழியோடு சொல்லாடும் போது. சூலுற்ற குருகு கடலின் அலையோசைக்கு அஞ்சுவதுபோல அன்னையின் கடுஞ்சொல் கேட்டு அஞ்சுவதாக தலைவி கூறுவதை,

''நெடுஞ்சினைப் புன்னைக் கடுஞ்சூல் வெண்குருகு

உலவுத்திரை ஓதம் வெரூஉம்

உறவுநீர்ச் சேர்ப்பனோடு மணவா ஊங்கே.'' (நற் ;பா;31;10-12)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

பாலைநிலத் தலைவி

காதலால் கூடிக் கலந்த இருவரது பிரிவு ஒழுக்கத்தினைக் குறிப்பது பாலைத் திணையாகும். இவை அகத்திணைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மலைப்பகுதியும், காட்டுப்பகுதியும் கலந்த நிலப்பரப்பு வேனிற்காலக் கடுங்கதிர் வெம்மையால் கவினழந்து வறண்டு கிடக்கும். கோடைக்காலத்தில் எங்கும் வெப்பம் பொறுக்க முடியாத நண்பகலில் மரங்களெல்லாம் காய்ந்து கரிந்து நிற்கும் வெஞ்சுரம் மழையே இல்லாத கொடிய நிலம் என்று பாலை நிலம் பற்றிக் குறிப்பிடுவர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு திணைக்கும் நிலம் வகுத்த தொல்காப்பியர் பாலைக்குரிய நிலம் வகுக்கவில்லை. பிரிவிடை மெலிந்த தலைவி சொல்லியதில்,

''குண கடல் முகந்து, குடக்குஏர்பு இருளி,

மண்திணி ஞாலம் விளங்க, கம்மியர்

செம்பு சொரி பானையின் மின்னி'' (நற் ;பா;153:1-3)

என்ற பாடலடியில் கம்மியர் செம்பினால் செய்த பானையைக் கடைந்தாற் போன்று மின்னி எங்கும் மழையை பெய்வித்து தெற்கு திசை நோக்கி மறைந்தது போன்று தன் நெஞ்சம் தன்னிடத்தில் தங்காமல், தலைவனிடத்தில் சென்று தங்கியதாக கூறியுள்ளாள்.

மென்மை உருவாக்கம்

சங்க இலக்கியத்தில் பெண் மென்மையானவளாகவே காட்டப்படுகிறாள். சங்க இலக்கியச் சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயம், எனினும் பெண்ணின் காதல் வாழ்வில் தொல்லெச்சமரபும் (உடன்போக்கும்) காணப்படுவதால், பெண் இனத்தை முழுமையான இரண்டாந்தரப்படுத்தும் முயற்சித் தேவையாக இருந்தது. மூவிதக் கீழ்ப்படிதலுக்குப் பெண் உட்படவேண்டும் என்ற சமூக எதிர்ப்புக்கு மென்மைத் தோற்றப்புனைவு வடிகாலாக அமைகின்றது. உடல்ரீதியாகப் பெண் வலிமையுடையவளாகப் படைக்கப்படாததும் ஆகும். அச்சம், நாணம், மடன் பெண்ணுக்கு வேண்டுவதெனப் பதிவாக்கியுள்ளார். தொல்காப்பியரால் பெண்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட இந்த உருவாக்கக் கோட்பாடு சங்க இலக்கியத்தில் அச்சம், நாணம், மடன் ஆகிய பண்புகள் பதிவாக்கப்பட்டுள்ள சூழல் கொண்டு ஆய்வு செய்யப்படுகின்றது.

அச்சச்சூழல்

அச்சம் என்ற சொல் பெண்ணோடு தொடர்புப்பட்டு இல்லையெனினும் அலர், இற்செறிப்பு ஆகிய சூழல்களில் பெண்ணுக்கு அச்சம் முன் நிற்பது பதிவாகியுள்ளது. களவில் ஏற்பட்ட தலைவியின் உடன்போக்கிற்கும் அச்சமே காரணமாகிறது. தாயால் தலைவி இச்செறிக்கப்பட்ட போதும், தலைவியின் களவு கண்காணிக்கப்பட்டபோதும் தலைவி, தோழி ஆகியோர் மனதில் அச்சமே விஞ்சி நிற்கக் காணப்படுகிறது. தலைவியின் வேறுபாட்டை அறிந்து ஐயுறும் அன்னை, அவளது தோளின் புதுமணத்தைக் கண்டு வண்டும் இணையையோ என வினவும் போதும், தாயின் அமர்ந்த நோக்கினைக் கண்டுதான் இற்செறிக்கப்படலாம் என உணரும்போதும் அவர்கள் உள்ளத்தில் அச்சமே முன்நிற்கக் காணலாம். தலைவி தனக்கு அஞ்சியே உடன்போனாள் என்பதைத் தாயே ஒரு பாடலில் உடன்பட்டு நிற்றலில் காணமுடிகிறது.

இயல் - 2

களவுக்காலத்தில் தலைவியின் மாண்புகள்

களவு

இல்வாழ்வு அகமெனக் கருதப்படுதற்குக் கருத்தாவது களவு. அகவாழ்வின் முதற்நிலை களவு. இரண்டாம் நிலை கற்பு. ஆதலினால் களவு வழிப்பட்ட கற்பு சிறப்புடையது என்றெண்ணினா் பண்டைத் தமிழ்மக்கள்.

களவு வாழ்க்கையின் இனிமை

இயற்கையின் இடா்பாடுகளுக்கிடையில் மனிதா்கள் தரும் இன்னல்களைத் தாண்டி, பயணிக்கின்ற களவு வாழ்க்கையின் ஆரம்பம் இனிதாகவும் இடையில் போராட்டமும் இறுதியில் இன்பமும் உடையதாகத் தலைமக்களின் காதல் அடைவுபெறுகிறது. களவு வாழ்க்கையில் தலைவியின் மனவேகம் கற்புவாழ்க்கை நோக்கி நகருவதாகக் காட்டப்பட்டுள்ளது.

பிரிவு

களவில் தலைவன், தலைவியின் உள்ளம் அன்பால் பிணைக்கப்பட்ட பின்னா் சமூகத்தின் மரபுவழியிற் போற்றுதற்குரிய வாழ்க்கையான கற்புநிலையை அடைவதற்கு வரைவு மேற்கொள்ளப்பட வேண்டும். இந்நிலையில் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவினை நிகழ்த்துகிறான்.

பொருளீட்டல் பிரிவு

பொருள் சாா்ந்து நிற்பது பொருளீட்டல் ஆகும். செல்வக் குடியில் பிறந்த தலைமகன், தன்னிடத்து போதுமான செல்வமிருப்பினும் தன்னுடைய தகைமைக்கும் குடும்பத்திற்கும் பொருட் சோ்க்கும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்கிறான். இப்பிரிவு இல்லறக் கடமைக்கும் ஆணின் உள்ள உறுதிக்கும் இயல்பாய் வெளிப்படும் பிரிவு குடும்பம், சமூகம், அரசு என அனைத்தின் இயக்கங்களுக்கும் அடிப்படை ஆதாரமாய் அமைவது பொருளீட்டல் ஆகும்.

“பொருள்வயிற் பிரிவா ராயினில் உலகத்துப்

பொருளே மன்ற பொருளே

அருளே மன்ற வாருமில் லதுவே” (குறு :174 :5-7)

என்ற பாடலின் வழி அறியமுடிகிறது.

பசலை பாய்தல்

காதலில் திளைத்த கண்கள் தலைவன் அன்பினில் மூழ்கிய நெஞ்சம் என்று தலைவனுடன் கூடப் பெற்றவளாய், இன்பத்துள் மூழ்கிய களவு காலத்தினுள் தலைவன் பிரிந்து செல்கிறான். பிரிவின் மிகுதியால் தலைவியின் உடல்மெலிந்து, நலிந்து வலையல்கள் கழண்டு விழும்பொருட்டு உண்ண மறுத்து உறங்க மறந்து வாழும் நிலைதனில் பசலை ஏற்படுகிறது. தலைவியின் நலனில் அதிக

அக்கறை கொண்டு, தனது அன்பினை மிகுதியாய்ச் செலுத்தி, கண் போன்று காத்திடும் அன்னை, தலைவியின் தன்மையை நன்கு அறிகிறாள். இதனை,

“அன்னை ஓம்பிய வாய்நலம்

என்னை கொண்டான் யாமின்” (குறு : 223 :6-7)

எனும் பாடல் வரியில் தாயால் பேணிப் பாதுகாக்கப்பட்ட அழகு நலனெல்லாம், தலைவனால் அழிந்தது என்று கூறி வருந்துவதைக் காணமுடிகிறது.

தூக்கமின்மை

தலைவனின் பிரிவைத் தாங்க இயலாது இரவில் தூங்காது விழித்திருக்கும் பெண்ணையும் குறந்தொகைக் காட்டுகிறது. இரவில் ஊரே உறங்க அவள் மட்டும் விழித்திருந்ததால், தலைவனின் பிரிவுத் துயரம் அவளைப் பெரிதும் வாட்டுகிறது.

“முட்டுவேண் கொல் தாக்குவேண் கொல்

ஓரென் யானும் ஓர் பெற்றி மேலிட்டு

ஆஅர் ஓல்! ஏனக் கூவுவேன் கொல்” (குறந் :28)

என்று பாடுவது போல் அமைந்த பாடல் ஒரு பெண் பித்துப் பிடிக்குமளவிற்கு அவளின் மனநிலையைத் தலைவன் உருவாக்கிச் சென்றுவிடுவான் என்பதை அறியமுடிகிறது

காந்தள் வளர்த்தல்

தலைவன் மீதுற்றக் காதலினால் பிரிவு நிகழ்த்து முடித்தவிடத்துத் தலைவி அவன் நாட்டிலிருந்து அடித்து வரப்படும் காந்தள் கிழங்கினை நட்டு வளர்க்கிறாள். அச்செடியைப் பார்க்கும்போதெல்லாம் தலைவனின் மீதான காதல் அதிகமாகிறது. தலைவன் தொடர்பான பொருளைக் காணுமிடத்துத் தலைவியின் உள்ளம் மகிழ்வதையும், அன்பு அதிகமாவதையும் காணமுடிகின்றது.

உடன்போக்கு

தலைவனைப் பிரிந்து வாழுமிடத்துத் தலைவி பெறும் மனத்துன்பம் கொடுமையானது. இவ்வின்னலைத் தடுத்தற் பொருட்டும், தன்னலம் அழிதலைத் தாங்காவிடத்தும் தலைவி தலைவனுடன் உடன்போக்கு செல்லத் துணிகிறாள்

வரைவு நீட்டிப்பு

களவுக்காலத்தில் தலைவன் தலைவி இருவரும் ஒருயிராக வாழ்ந்தாலும் தலைவி தன் உள்ள வேட்கையைத் தலைவனிடத்து நேரடியாகக் கூறியதில்லை. துணைமையாகத் தோழியைக் கொண்டுதான் வரைவு மேற்கொள்வது பற்றி வெளிப்படுத்துகிறாள். தன்னுடைய பெண்மை நலன் அழிந்து, துன்பப்படும் தன்மையினைச் சங்க அகப்பாடல்கள் மூன்று நிலைகளில் காட்டுகின்றன. உடல்மெலிவு, மனஉளைச்சல், கண்ணீர் இம்மூன்றும் தலைவிக்கு இன்பத்தைத் தராமல் இன்னல்களைத் தருவனவாகும்.

இயல் -3

கற்பு காலத்தில் தலைவியின் மாண்புகள்

கற்பு விளக்கம்

"களவியலில் மறைந்தொழுகியக் காதலர்கள் திருமணம் புரிந்து வாழ்வது கற்பியலாகும். களவு நெறித் திருமணமாக முடியுமாயின் அதனை நன்நெறி என்பர். களவின் முடிவு கற்பு என்பது அகத்திணை வலியுறுத்தும் அறங்களும் தலையானதாகும்." என்று செ.மகேஸ்வரி குறிப்பிடுகின்றார்.

கற்புநெறி

கற்புநெறி என்பது கரணத்தோடு கூடிய நிலையில், கொள்வதற்கு ஏற்ற தகுதிகளையுடைய ஆடவன் ஒருவனுக்குக் பெண்ணைக் கொடுப்பது ஆகும். எனவே, முன்னரே ஆடவனும் பெண்ணும் ஒருவரை ஒருவர் அறிந்திருந்தாலும், அறியாதிருந்தாலும் இல்லறத்தில் அவர்கள் முறைப்படி ஈடுபட, ஒரு சடங்கு வேண்டியிருந்தது இதுவே கற்புநெறி ஆகும்.

கற்பின் வகைகள்

தலைக்கற்பு, இடைக்கற்பு, கடைக்கற்பு, மனை மாண் கற்பு, செயிர்தீர் கற்பு, மாசில் கற்பு என கற்பின் வகைகள் காணப்படுகின்றன.

கற்பு வாழ்க்கையில் தலைவி

வினையறத்தை ஆண்கள் மேற்கொள்ள, மனையறத்தைப் பெண்கள் காத்தனர். மருத நிலத்தில் தலைவி இல்லறக் கடமையில் கணவனைத் தொழுது, மக்களைப் பாதுகாத்து, கணவன் பரத்தமையை நாடியவிடத்து பொறுமையுடன் இருந்து, அறம் வழுவாத வாழ்வினை மேற்கொண்ட கற்பு தலைவிக்குரியது.

இல்லறத் தலைவி

அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய பண்புகளால் ஒன்றுபட்டத் தலைவனும் தலைவியும் இணைந்து இல்லறம் நடத்தும் சிறப்பை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இல்லற வாழ்வில் ஈடுபடும் தலைவனுக்கும் தலைவிக்கும் இன்றியமையாத ஒத்த அன்பு தான் காதல் எனப்பட்டது. தலைவனும் தலைவியும் பிரியாது கூடி வாழும் இல்வாழ்க்கையே பெரும் பேறாகக் காணப்பட்டது. வறுமையில் இருந்தாலும் இருவரும் பிரியாமல் சேர்ந்து வாழும் வாழ்க்கையே சிறந்ததாக கருதப்பட்டது.

விருந்தோம்பல் பண்பு

இல்வாழ்க்கையின் தலையாயப் பண்பாக விருந்தோம்பல் கருதப்பட்டது. விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்கால மக்கள் எண்ணுகின்றனர். விருந்தினர் வேறு, உறவினர் வேறு, முன்பின் தெரியாத புதியவர்களுப்கே விருந்தினர் எனப் பெயர். எவராக இருந்தாலும், எம்மொழியினராக இருந்தாலும் வரவேற்று அவர்களை உபசரிப்பது தமிழர் பண்பாகும். எனக்கும் என் கணவனுக்கும் ஊடலே ஏற்படுவதில்லை என்று ஒரு பெண் கூறுகின்றாள். ஊடல் உண்டாகாமைக்கு அவள் கூறும் காரணம் என்னுடைய வீட்டில் விருந்தினர்கள் எப்பொழுதும் தங்கியிருக்கின்றனர். அவர்களை உபசரிப்பதிலேயே எங்கள் நேரம் கழிகின்றது ஓய்வேயில்லை ஆகையால் ஊடல் ஏற்படுவதில்லை

என்கிறாள். மேலும் இரவில் விருந்தினர்கள் வந்தாராயின் அவர்களை உபசரித்து மகிழ்ச்சியடைபவள் ஒழுக்கம் நிறைந்த கற்பினையுடைய பெண். இதனை,

“அல்லில் ஆயினும் விருந்து வரின் உகுக்கும்

முல்லை சான்ற கற்பின்

மெல்இயற் குறுமகள் உறைவின் ஊரே” (நற் 142: 9-11)

இதன் வழி அறிய முடிகிறது

குழந்தை வளர்ப்பு

பெண்களின் கடமைகளில் மிக முதன்மையானதாபப் கூறப்படுவது குழந்தை வளர்ப்பு முறையாகும். தாயின் மன நிலையினைப் பொறுத்தே குழந்தையின் எதிர்கலாம் நிர்ணயிக்கப்படுகிறது. குழந்தையைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கான பொறுப்பு, முக்கியமாக முதலாவதாகத் தாய்க்குத்தான் ஏற்படுகிறது. இது அவள் கருத்தறித்தவுடனே அமைகிறது. குழந்தை பேறு இல்லாத மனை விளக்கம் பெறாத இருண்ட மனையாகவே கருதப்படும். எவ்வகை செல்வங்களும், சிறப்புகளும் இருப்பினும் குழந்தை செல்வத்தினையே இலக்கியங்கள் சிறப்பாகப் போற்றுகின்றன. குழந்தை பேறு இல்லாத மனை விளக்கம் பெறாத இருண்ட மனையாகவே கருதப்படும். எவ்வகை செல்வங்களும், சிறப்புகளும் இருப்பினும் குழந்தை செல்வத்தினையே இலக்கியங்கள் சிறப்பாகப் போற்றுகின்றன. இதனை,

“இம்மை உலகத்து இசையொடும் விளங்கி

மறுமை உலகமும் மறுவின்று எய்துப

செறுநறும் விழையும் செயிர்தீர் காட்சிச்

சிறுவர்ப் பயந்த செம்மலோர்” (அகம் :66 :1-4)

என்ற பாடல் மூலம் அறியமுடிகின்றது.

தலைவியின் காமநோய்

தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவினைத் தாங்க முடியாமல் வருந்துவாள். விலங்கின் தழுவலும் பறவையின் புணர்ச்சியும் காரும் மாலையும் பிற இன்பச் சூழ்நிலைகளும் அவளைக் கொல்லும். அவளது அடக்கத்தைக் கிளரும். தலைவன் தான் வருவதாகக் குறித்துச் சென்ற காலத்தை எதிர்நோக்கி தலைவன் வருவான் என்று மிகுந்த நம்பிக்கையோடுக் காத்திருப்பாள் தலைவி.

தலைவி கனவில் மகிழ்தல்

தலைவனைப் பிரிந்தத் தலைவி உறக்கமில்லாமள் தவிப்பாள். அப்பொழுது தலைவியின் மனதில் தோன்றிய ஆசைகள், எண்ணங்கள் கனவாக வெளிப்படும். மிகுந்த நிறைவேறாத ஆசைகளும் கனவாக வெளிப்படும். பிரிவுக் காலத்தில் அடக்கி வைக்கப்பட்டிருந்த பாலுணர்வு, தலைவியின் அடக்கி வைக்கப்பட்ட ஆசை கனவுகளாக வெளிப்படுகின்றன.

இயல் - 4

தலைவியின் ஒப்பனைக் கலை திறன்

ஒப்பனை

ஒரு நாட்டு மக்களின் அழகு உணர்ச்சியின் அளவுகோலாக அமைவது ஒப்பனைக் கலையாகும். அழகில் சற்றுக் குறைந்தவர்கள் அழகுடையவர்களாகக் காட்சியளிக்கவும், இயல்பாகவே அழகுடையவர்கள் மேலும் அழகுடையவர்களாகக் காட்சியளிக்க உறுதுணையாவது ஒப்பனைக் கலையாகும்.

தலைவியின் ஒப்பனைக் கலைத்திறன்

தலைவியின் ஒப்பனையானது அதிகளவில் காணப்படுகின்றன. தலை முதல் பாதம் வரை தலைவியானவள் ஒப்பனையை மேற்கொண்டாள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

ஆடைகள்

அக்கால மக்கள் தழை உடையையும், மரவுரியையும், தோலாடைகளையும் உடுத்தியிருந்தனர். குறவரும் மறவரும் இத்தகைய உடைகளைப் பயன்படுத்தினர். ஆனால் நாடு நகரங்களில் வாழ்ந்தவர்கள் பருத்தி, பட்டு, கம்பள ஆடைகளை உடுத்தினர்.

ஆடை வகைகள்

பண்டைத் தமிழர் பல்வகையான ஆடைகளை அணிந்தனர். அவை பொன்னாடை, பட்டாடை, பூவாடை, மேலாடை, படம், மெய்ப்பை, வட்டுடை, தாளிதம், ஈரணி, கச்சை எனப் பலவகையினவாகும்.

ஒப்பனையில் அணிகலன்கள்

தமிழ் மக்கள் ஆண்டாண்டுக் காலமாகத் தம்மை அழகுபடுத்திக் கொள்ள அணிகலன்களை அணிந்து வருகிறார்கள். அவர்தம் அணிகலன்கள் விலை உயர்ந்தவை: நுட்பமான வேலைப்பாடு நிறைந்தவை: கலைநயம் நிறைந்தவை: கவர்ச்சியானவையாகும்.

இயற்கை அணிகலன்கள்

ஆடைக்குத் தழையைப் பயன்படுத்தியது போன்றே அணிகலன்களுக்குப் பல்வகையான தளிர்களையும், மொட்டுக்களையும், மலர்களையும், கொடிகளையும், காதுகளில் சொருகியும், கழுத்தில் அணிந்து கொண்டும், கைகளிலும், தலையிலும் சுற்றிக் கொண்டும் தம்மை அலங்கரித்துக் கொண்டனர். வளை, தொடி, குழை ஆகிய அணிகலன்களை தலைவி அணிந்திருந்தாள்.

காதணிகள்

தொல்பழங்காலத்தில் காதணிகள் என்பவவை குழையாகவும், பூக்களின் தோடுகளாகவும், ஓலைகளாகவும் இருந்தன. கால ஓட்டத்தில் காதணிகளின் உருவம் மாறி உலோகங்களாயின. ஆயினும் பெயர் மாற்றம் பெறாமல் அதே பெயர்களில் காணப்படுகின்றன. பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் காது குத்திக் குழையணிந்து கொண்டனர். இக்காலத்தில் ஆடவர் காதணி அணிந்து

கொள்ளும் வழக்கம் பெரும்பாலும் குறைந்துவிட்டது. எனினும் குழந்தைப் பருவத்தில் ஆண் பெண் இருபாலார்க்கும் காது குத்தும் வழக்கம் ஒரு விழாவாக கொண்டாடப்படுகின்றது. இது சமயத் தொடர்பான சடங்காகவும் மாற்றம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

புல்லிகை

காதணிகளில் இதுவும் ஒன்றாகும். இது காதினின்று தொங்கும் இயல்பினதாகும். இது மெல்லிய காதில் கிடக்கும் புல்லிகை என்னும் பூணாகிய கீழே தொங்கும் இயல்புடையது.

"ஞால் இயல் மென் காதின் புல்லிகைச் சாமரை" (கலி 96: 11)

என்று காணப்படுகின்றது.

கொடுங்குழை

வளைந்திருப்பதால் இது கொடுங்குழை எனப் பெயர் பெற்றது. தலைமகள் ஒருத்தி கொடுங்குழை அணிந்திருந்ததாக அகநானூற்று பாடலொன்றில் அறிகின்றோம்.

"கொடுங்குழைக் கமர்த்த நோக்க" (அகம் 3: 17)

தலைவியின் வளைந்த காதணிகளுடன் ஒத்து நிற்கும் பார்வையாகும். இது ஒளிமிகுந்த மத்தகமணி பதிக்கப்பெற்ற விளக்கம் மிக்க காதணி இந்த கொடுங்குழை ஆகும். இதுவே காதணிகளாகும்.

கழுத்தணிகள்

கழுத்தில் அணியப்படும் அணிகள் கழுத்தணிகள் எனபடும். பேரணிகளில் பெரும்பாலானவை கழுத்தணிகளேயாகும். கழுத்தை அணி செய்த சில அணிகலன்கள் பூண், இழை, கலன் என்னும் பொதுச் சொற்களாலும் சொல்லப்பட்டுள்ளன. தலைவி முத்து, மணி, பொன் முதலியவற்றால் ஆன கலன்களைக் கழுத்தில் அணிந்திருந்தாள்.

மதாணி

கழுத்திலிருந்து தொங்கவிடப்பட்டிருந்ததும், மார்பை அணி செய்யும் பதக்கத்தை உடையதுமான அணி மதாணி எனப்பட்டது. பொற் காசுகளைப் பொற்கம்பியில் கோர்த்துக் காசு மாலையாகச் செய்து அணிந்து கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் மட்டுமின்றி இக்காலத்திலும் இருக்கிறது.

"புதுநாண் நுழைப்பான் நுதிமான் வள்ளுகிர்ப்

பொலங்கல ஒருகா சேய்க்கும்" (குறு 67: 3-4)

என்ற பாடலடியின் மூலம் மதாணி என்னும் கழுத்தணியைப் பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது.

தோளணி

தோளில் அணிந்து கொள்ளப்பட்ட அணிகளில் தொடி, தோள்வளை அல்லது வாகுவலயம் என்பன முக்கியமானவையாகும். வையையில் புதுப்புனல் புரண்டு வந்தது. ஆண்களும் பெண்களும் நீராட்டு

விழாக் கொண்டாடச் சென்றனர். விரைந்து வந்த வெள்ளம் பெண்களின் அணிகலன்களைக் கவர்ந்து சென்றது

கையணிகலன்கள்

மனித உறுப்புகளில் கைகள் மிகச் சிறப்பானவையாகும். கண்களுக்குச் சமமாகச் சொல்பவையாகும். கைகளில் அணியும் அணிகலன்கள் அனைவர் பார்வைக்கும் தென்படுபவையாகும். கைகளில் அணிகலன்களை அணிந்து கொள்வது ஒப்பனையில் முக்கியமானதாகும்.

மோசை

நற்றிணையில் ஒளி பொருந்திய இழைகளையணிந்த மாதர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவர்கள் விளக்கம் மிகுந்த வளையல்களை அணிந்திருந்தனர். அவ்வளையொடு மெல்லிய விரல்களில் அணிந்த விரலணிகளும் சொல்லப்பட்டுள்ளன. இதன் பெயரே மோசை எனப்பட்டது. இதனை,

“ஒள்இழை மகளிர் இலங்கு வளைத் தொடூஉம்

மெல் விரல் மோசை போல” (நற் 188)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன

இடையணிகள்

மகளிர் ஒப்பனையில் இடைக்குரிய அணிகள் பலவும் இடம் பெற்றிருந்தன. இக்காலத்தில் ஒட்டியாணம் அணிந்து கொள்வதைக் காண்கிறோம்.

பாண்டில்

பாண்டில் என்பது ஒட்டியாணம் போன்றதோர் இடையணியாகும். ஐங்குறுநூற்றில் பாலை பாடிய ஓதலாந்தையார் இதனைப் பொற்காசுகளை வரிசையாகக் கோர்த்துச் செய்யப்பட்ட இடையணிகலன்கள் எனக் கூறியுள்ளார். இதை மகளிர் அணிந்து அழகுப்படுத்தினர் என்பதை,

“பொன் செய் பாண்டிற் பொங்கலம் நந்த

தேர் அகல் அல்குல் அவ்வரி வாட” (ஐங் 316)

என்ற பாடல்வரி மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

காலணிகள்

கணைக்காலில் அணியப்படுவதையும், கால் விரல்களில் அணியப்படுவனவும் காலணிகலன்கள் எனப்படும். காலணிகலன்கள் பண்பாட்டுச் சிறப்புடன் வரலாற்றுச் சிறப்பும் கொண்டவையாகும்.

சிலம்பு

சிலம்பு காலில் அணிந்து கொள்ளப்படும் அணிகலன்களில் ஒன்றாகும். பண்டைக்காலப் பெண்கள் சிலம்பு அணிந்து கொள்வது பெரு வழக்காக இருந்தது. மணம்புரிந்து கொள்ளுவதற்முன் இது அணியப்பட்டது. திருமணத்திற்கு முன் சிலம்பைக் கழற்றுதல் ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டது. அதனைச் சிலம்புகழி நோன்பு என்றனர்.

"அருங் கடி வியல் நகர்ச் சிலம்பும் கழியாள்" (அகம் 315: 8)

என்ற பாடலடி குறிப்பிடுகின்றன.

கூந்தல் ஒப்பனைப் பாணிகள்

தமிழ் இலக்கியங்களில் கூந்தல் ஒப்பனையானது பல்வகைப் பாணிகளாகக் காணப்படுகின்றன. இன்றைய நாகரிக மங்கையரும் இதனைப் பின்பற்றக் கூடியனவாகும்.

பஞ்சாய்க் கூந்தல்

பஞ்சாய்க் கோரை என்பது தண்டான் கோரை இது நீளமானதாகும். கூந்தலைப் பின்னாமல் மேற்பகுதியில் தொகுதியாகக் கட்டி நீளமாகத் தொங்கவிடுதலே பஞ்சாய்க் கூந்தலாகும்.

"பைஞ்சாய்க் கூந்தல் பசு மலர்ச் சுணங்கின்

அந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றே" (ஐங் 76)

என்ற பாடலடிகள் மூலம் தலைவியின் கூந்தல் ஒப்பனை முறையை அறிய முடிகின்றது.

பின்னல்

இக்காலத்தில் பின்னலை சடை என்று கூறுவர். கூந்தலை முக்கூறாகப் பிரித்து பின்னுதல் ஆகும். இதை பின்னல், பின்னு என்றெல்லாம் இலக்கியத்தில் காணப்படுகின்றது. தலைவி கூந்தலைப் பின்னியமையும், இதனை யானையின் துதிக்கைக்கு உவடையாகச் சொல்வப்பட்டதை,

"பிடிக்கை அன்ன பின்னகம்" (அகம் 9)

என்ற பாடல் வரி குறிப்பிடுகின்றது.

வாழைப்பூக் கொண்டை

மெல்லிய சாயலை உடைய தலைவி தன் கூந்தலை, ஈன்ற வாழையின் பூப்போல் முடித்துக் கொண்டாள். இதனை,

"வாழைஈன்ற வை ஏந்து கொழு முகை" (நற் 225)

என்ற பாடல்வரி எடுத்துரைக்கின்றன.

மடித்துக் கட்டிய கூந்தல்

புலிநகக் கொன்றையின் மலர்ந்த பூக்களைப் பறித்து வந்து பூவும், மயிரும் மாறிமாறி வருமாறு இணைத்து வாரிமுடித்த நீண்ட கூந்தலைத் தோளில் வந்து படியுமாறு மடித்து முடித்தாள் தலைவி. இதனை,

"கொழுநிழல் ஞாழல் முதிர்இணர் கொண்டு

கழும முடித்து கண்கூடு கூழை

அவல் மிசைத் தாதொடு தாழ" (கலி 56)

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது.

மின்னல் கொண்டை

கார்மேகத்தின் இடைஇடையே பறந்தோடும் மின்னல் ஒளி வீசுவதைப் போன்று பொன்னைச் சிறுசிறு கூறாக வெட்டி இணைத்த அழகிய வகிர் என்னும் தலையணியை அணிந்து கூந்தலை முடித்தாள் தலைவி.

"மின் ஒளிர் அவிர் அறல் இடைபோழும் பெயலேபோல்

பொன் அகைதகை வகிர்வகை நெறி வயங்கிட்டு" (கலி 58)

என்ற பாடலடி மூலம் அறியலாம்.

முக ஒப்பனை

மனித உறுப்புகளில் தலை முதன்மையானது. தலையிலும் முகம் சிறப்பானது. முகத்தில்தான் கண், காது, மூக்கு, புருவம், நெற்றி, உதடுகள் முதலியன உள்ளன. எனவே முக ஒப்பனை என்பது இவ்வுறுப்புகளின் ஒப்பனையாகவே உள்ளது.

ஒப்பனையில் நறுமணப் பொருள்களும் வண்ணப் பொருள்களும்

சங்ககால மக்கள் நிறமூட்டும் பொருள்களையும், நறுமணச் சுண்ணங்களையும், நறுமணப் பொருள்களையும் பயன்படுத்தினர். நறுமணப் பொருள்களைத் தயாரித்தலில் பெண்கள் கவனம் செலுத்தினர். இயற்கையாக கிடைக்கும் சந்தனம், அகில், தகரம், முதலியவற்றையும் செயற்கையாகச் செய்யப்பட்ட அஞ்சனம, சுண்ணம், மணநெய் ஆகியவற்றையும் பயன்படுத்தினர். இவற்றில் சிலவற்றை அரைத்து சாந்தாகவும், குழம்பாகவும் சிலவற்றை இடித்துச் சுண்ணமாகவும், சிலவற்றை எரித்துப் புகையாகவும், சிலவற்றை நெய்யாகவும் நுகர்ந்தனர். இவற்றுடன் வண்ணப் பொருளான அஞ்சனம், குங்குமம், அலத்தகம் ஆகியவை பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன.

இயல் - 5

வாழ்க்கை மரபுகள்

சடங்குகள்

மக்கள் தாங்கள் செய்துவரும் வழிபாடு விழா முதலியவற்றை முந்தையோர் முறைப்படி செய்து வந்தனர். இங்ஙனம் பரம்பரை வழக்கமாகச் செய்து வரும் செயல்களே சடங்குகளாகும். சங்ககால மக்கள் தங்கள் சமூக அமைப்பில் பற்பல சடங்குகளை மேற்கொண்டிருந்தமை இலக்கியங்களால் புலனாகின்றன. அச்சடங்குகளை உற்று நோக்கு கையில் பிறப்பு திருமணம் மற்றும் இறப்பு போன்ற நிகழ்வுகளால் பின்பற்றப்படும் சடங்குகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக கருதப்பட்டதை அறிய முடிகின்றது.

திருமணச் சடங்குகள்

பண்டைத் தமிழர் திருமணம் கலப்பற்ற தூய தமிழ்த் திருமணமாகும். இருமனங்கள் இணையும் உடலின்ப வாழ்க்கை முறையின் தொடக்கமாக திருமணம் அமைகின்றது. இத்திருமணத்தால் தலைவனும் தலைவியும் ஒத்த இன்பம் நுகர்ந்து இல்லறக் கடமை ஆற்றத் தொடங்குகின்றனர்.

சிலம்புக்கழி நோன்பு

சங்க காலத் திருமணத்தில் நடைபெறுவதற்கு முன்பு நடத்தப்படும் முக்கியச் சடங்கு சிலம்புகழி நோன்பாகும். திருமணம் நடைபெறுவதற்கு முன்பு பெண்களுக்கு இளம் பருவத்தில் அணிவிக்கப்படும் சிலம்பினைக் கழற்றுவதற்கு நிகழ்த்தப்படும் சடங்கினையே சிலம்புகழி நோன்பு என்பர். பெரும்பாலும் இந்த சடங்கு பெண் வீட்டிலேயே நிகழ்த்தப்படும். உடன்போக்கு செய்யும் பெண்டிர்க்கு இச்சடங்கு திருமணத்திற்கு பிறகு அவர் கணவர் வீட்டிலேயே நடைபெறும்..

“நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்

எம்மனை வதுவை நன்மணம் கழிகென” (ஐங் 399: 1-2)

என நற்றாய் சிலம்பு கழித்தல் ஓர் இடத்தில் நிகழ்த்தினாலும் திருமணத்தை எம் இல்லத்தில் நடத்த வேண்டும் எனும் வேட்கை உடையவளாய் கூறும் கூற்று அறியப்பெறுகிறது.

அம்பாவாடல்

கன்னி மகளிர் இளமையில் நோற்கும் நோன்புகளிலே ஒன்று அம்பாவாடல். இதனை தைந்நீராடுதல் என்றும் குறிப்பிடுவர். இது பூமியானது மழைவளம் பெற்று குளிர்வதற்காகவும் அக்கன்னியர் தமக்கு ஏற்ற கணவனைப் பெற்று அவனுடன் கூடி என்றும் இன்பம் பெற்று சுற்றமுடன் சிறந்து வாழ வேண்டும் என்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் சடங்காகும்.

பொருத்தம் பார்த்தல்

தம் பெண்ணுக்கும், பிள்ளைக்கும் திருமணம் செய்ய விரும்புவோர் பொருத்தம் பார்த்தல் அக்காலத்தில் இருந்தது. பிறப்பு, குடும்பம், பொருளியல், ஒழுக்கம், வயது, தோற்றம் முதலானவை உற்று நோக்கப்பட்டன. எது இல்லாவிட்டாலும் பிறப்பு ஒத்திருக்க வேண்டும் என்று காணப்படுகின்றது.

பரிசம் அளித்தல்

பெண்ணுக்கு மணமகன் பரிசமளிக்கும் வழக்கம் தொன்று தொட்ட தமிழர் மரபாகும். அன்று இது முலைவிலை, சிறுவிளைவிலை, பரியம் என்று அறியப்பட்டது. மணமகளின் பெற்றோர் வீட்டை அலங்கரித்து மணலை குவித்து எமது மகளுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்துள்ளோம் என்னும் செய்தியைக் கூறி திருமணத்தின் முன்னர் செய்யப்படும் திருமண உறுதி விழா ஒன்றும் நடத்தப்பட்டது.

இல்லுறை தெய்வச் சடங்குகள்

திருமணம் நிகழும் முன்னர் இல்லத்தில் உள்ள தெய்வங்களை வணங்கித் தலைவி அவற்றின் அருளை இறைஞ்சி நிற்பது உண்டு என காணப்படுகின்றன. அத்தெய்வங்களுக்குப் பலியிடுதலும் உண்டு என அறியமுடிகிறது.

திருமணத்தில் விருந்தளித்தல்

திருமண நிகழ்வைக் குறித்தும் மிகவும் விரிவாகவும் நுட்பமாகவும் செறிவாகவும் அகப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

“உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை

பெருஞ்சோற்று அமலைநிற்ப, நிரை கால்” (அகம் 86: 1-2)

என்ற பாடலடிகளில் திருமணத்திற்கு வந்தவர்களுக்கு உளுந்து கலந்து ஆக்கிய சோற்றை மணநாளில் வழங்கியதாகக் குறிப்பிடுகின்றது. மேலும்,

“மைப்பு அறப் புழுக்கின் நெய்க் கனி வெண் சோறு

வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி” (அகம் 136: 1-2)

இறைச்சியோடு கலந்த வெண்சோற்றை அனைவருக்கும் கொடுத்ததாகக் காணப்படுகின்றது. எனவே மணநிகழ்வில் அளிக்கப்படும் உணவு என்பது அந்தந்த இனக்குழுவின் உணவே என்பதையும் அறியமுடிகிறது. அதில் சடங்குப் பூர்வமான கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை என்பதையும் அறியமுடிகின்றது.

திருமணத்தில் தாலி

சங்க இலக்கியத்தில் தாலிகட்டும் வழக்கம் இருந்ததற்குரிய சான்றுகள் இல்லை. ஆனால் அறுகம்புல் மாலையைத் தாலிக்கு அடையாளமாக சங்ககாலத் தமிழர் அணிந்துள்ளச் செய்தி இலக்கியங்களில் காணமுடிகின்றது. இதனை,

“மென் வாகைப் புன்புறக் கவட்டிலை

பழங்கன்று கறித்த பயம்பு அமல் அறுகைத்

தழங்கு குரல் வானின் தலைப் பெயற்கு ஈன்ற” (அகம் 136)

என்ற பாடலில் அறியலாம்.

இறப்பு மற்றும் ஈமச் சடங்கு

சங்க இலக்கியங்களில் இறப்புப் பற்றிய செய்திகள் மலிந்து கிடக்கின்றன. இறந்தவர்களை சுடுகாட்டில் தீமூட்டி எறித்தலும், தாழிகளில் இட்டுப் புதைத்தலும், வீரர்கும், பிறர்க்கும் கல்நட்டு வழிபாடு செய்தலும், பெண்கள் தீப்பாய்ந்து உயிர் நீத்தலும்,கைம்மை நோன்பு ஏற்றலும் இறந்தபட்ட முன்னோர்களுக்கு தென்புலத்தார் கடனிறுத்தலும் பற்றிய விவரங்கள் பரந்து கிடக்கின்றன. இவை தமிழ் மக்களின் பண்பாட்டு வரலாற்றில் மிகவும் சிறப்பான இடம் வகிக்கின்றன.

மகளிர் கூந்தல் களைதல்

பெண்களுக்கு அழகு தருவது அவர்தம் கூந்தலே. அக்கூந்தலிலேதான் பெண்கள் மலரணிந்து மகிழ்கின்றனர். ஆனால் கணவன் இறந்துபட தமக்கு அழகு தந்த கூந்தலைப் பெண்கள் களைந்தனர். கணவன் உயிருடன் இருக்கும் வரை மட்டுமே பெண்கள் தலை முடியினை வாரிக்கட்டியுள்ளனர். கணவன் இறந்தவுடன் பெண்கள் அத்தகையச் செயல்களைச் செய்ய மறுத்துள்ளனர். தலைமுடியைக் களைதல் என்ற செய்தியிலிருந்து பூச்சூடும் வழக்கத்தினையும் பெண்கள் கை விட்டுள்ளனர் என்பதும் தெளிவாகின்றது. இப்பழக்கமே சடங்காக இக்காலம் வரையிலும் கணவன் இறந்த பெண்கள் பூச்சூடுதல் கூடாது என்ற கட்டாயத்தில் உள்ளது.

அணிகலன்களைக் களைதல்

கணவனுடன் வாழ்கின்ற பெண்களே பல்வேறு அணிகலன்களை அணிந்திருப்பர். கணவனை இழந்த பெண்கள் எவ்வித அணிகலன்களையும் அணிந்தது இல்லை.

உடன் கட்டை ஏறுதல்

சங்க இலக்கியங்களில் உடன் கட்டை ஏறுதல் மற்றும் கைம்மை நோன்பு நோற்றல் குறித்தச் செய்திகள் பல இடங்களில் காணப்படுகின்றன. கைம்மை நோன்பு குறித்தச் செய்திகளைக் காட்டிலும் உடனுயிர் மாய்தல் அரிதாகவே காணப்படுகின்றது.

நம்பிக்கைகள்

நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்படுவன. சமூகத்தின் தேவைகள் குறிக்கோள்கள் போன்றவற்றின் அடிப்படையில் நம்பிக்கைகள் தோன்றுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன.

நிமித்தங்கள்

நிமித்தம் என்பது வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சிர குறியீடுகளின் வழி உணர்த்துவதாகும். பழங்காலத் தமிழர் இதனை புள், நிமித்தம் ஆகிய சொற்களால் சுட்டியுள்ளனர். இதனை இன்று சகுனம் என்று குறிப்பிடுகின்றோம். நற்செயல்களுக்கும் இயற்கையின் நிகழ்வுகளுக்கும் தொடர்பு காட்டுவது நிமித்தங்களின் செயல்பாடாகும். காக்கை, ஆந்தை ஆகிய பறவைகள் நிமித்தக் காரணிகளாக கருதப்பட்டன. பொதுவாக நற்செயலையும் நற்பயனையும் அறிவிக்கும் குறியினை நன்னிமித்தம் எனவும் தீய செயலினையும் தீமையையும் அறிவிக்கும் குறியினை தீ நிமித்தம் எனவும் வாகைப்படுத்தலாம்.

நன்னிமித்தங்கள்

ஒரு செயலைத் தொடங்கும் முன் நல்லநாளும், பொழுதும் நன்னிமித்தமும் பார்த்துத் தொடங்குவது தமிழ் மக்களிடம் இருந்துவரும் ஒரு வழக்கமாகும்.

பல்லி நிமித்தம் பார்த்தல்

பல்லி நிமித்தம் என்பது சங்க காலத்தில் பெரும்பாலும் தலைவன் தலைவியையே மையப்படுத்தியே அமைந்துள்ளது. தலைவன் பிரிவால் வருந்திய தலைவியைத் தோழி,

“நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கின் தேற்றும்” (நற் 246)

என்று பல்லியின் நற்சொல் நமக்கு நன்னிமித்தமே என்று கூறித் தேற்றுவது கொண்டு பல்லி சொல்லிற்குப் பலன் உண்டு என்று மக்கள் நம்பியதனை அறிந்து கொள் முடிகிறது

பச்சோந்தி நிமித்தம்

பல்லி நிமித்தம் போன்றே பச்சோந்தி நிமித்தமும் காணப்படுகிறது. இதனை,

“கானம் வெம்பிய வறங்கூர் கடத்திடை

வேனில் ஓதி நிறம்பெயர் முதுபோத்து” (நற் 186)

என்ற அடிகளின் வாயிலாகப் பச்சோந்தி நிமித்தம் பார்த்த செய்தியினை அறிந்து கொள்ள முடிகின்றது.

கண்துடித்தல்

பெண்களின் இடதுகண் துடிப்பதனை சங்க இலக்கியங்கள் நன்னிமித்தமாக குறித்துள்ளன. தும்மல் தொடர்ந்து வந்தால் தும்முபவரை தொலைவிலுள்ள உறவினரோ நண்பர்களோ நினைப்பதாக எண்ணுவதும் அதனை நன்மை தீமைகளை உணர்த்தும் சகுனங்களாகவும் கருதுவது தமிழ் மரபாகும். சங்க இலக்கியங்களில் கண்துடித்தல் தலைவன் வருகையை உணர்த்தும் நன்னிமித்தமாக அமைந்துள்ளது. இதனை,

“நுண்ணோர் புருவத்த கண்ணும் ஆடும்

மயில்வார் முன்கை வளையும் செறுஉம்” (ஐங் 218)

என்ற பாடல் மூலம் கண்துடித்தலை பற்றி அறியமுடிகிறது.

தீநிமித்தங்கள்

உன்னம் என்ற ஒருவகை மரம் நிமித்தம் காண்பாருக்கு வெற்றி எய்துவதாயின் தழைத்தும் தோல்வியுறுவதாயின் கரிந்தும் காட்டி பின் விளைவினை முன் உணர்த்துவதாகக் கருதுவர்.

கனவு

கனவுகள் பெரும்பாலும் பின் நிகழ்வனவற்றை முன் உணர்த்தும் நிலையிலேயே அமைகின்றன. தீநிமித்த கனவு நிகழ்ச்சிகளாக எயிறு நிலத்தில் வீழ்தல், தலையில் எண்ணெய் தேய்த்திருத்தல், களிறுமேல் ஊர்தல், கட்டிய ஆடை நீங்கல், படைக்கலம் கவிழ்தல் ஆகியன காணப்படுகின்றன.

கூகையின் அலறல்

பறவைகள் எழுப்பும் ஒலிகளைக் கொண்டு சகுனம் பார்த்தனர். கூகையின் ஒலியை மக்கள் இன்று வரை அபசகுனமாகவே கருதுகின்றனர். கூகையின் அலறலைக் கேட்டால் இறப்பு நிகழும் என்ற கருத்தை,

“எம் ஊர் வாயில் உண்துறைத் தடைஇய

கடவுள் முது மரத்து, உடன் உறை பழகிய,

தேயா வளை வாய், தெண் கண் கூர் உகிர்

வாய்ப் பறை அசாஅம், வலி முந்து கூகை” (நற் 83: 1-4)

என்ற பாடலில், கூகையே, நீ, அவர் என்னை நாடி நள்ளிரவில் வரும்போது உன் குரலை எழுப்பி, மற்றவர்களின் தூக்கத்தைக் கலைத்து எழுப்பாமல் இருந்தால் உனக்கு எலிக்கறியைச் சுட்டு விருந்து படைக்கிறேன் என்று தலைவியின் சார்பில் தோழி வேண்டிக்கொள்கிறாள். பறவைகளின் செயல்பாடுகளின் மீது மக்கள் நம்பிக்கை நிமித்தம் கொண்டிருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

ஆய்வு முடிவுகள்

சங்க இலக்கியத்தில் அகம் சார்ந்த பாடல்களில் தலைவன், தலைவி இருவரும் சிறப்பிடம் பெற்றிருப்பினும், அகப்பாடலுக்கு உயிர் ஊட்டுபவளாகத் தலைவி திகழ்கிறாள். பாடுபொருள் அனைத்தும் தலைவியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. எட்டுத்தொகை அகநூல்களில் தலைவி கூற்று பாடல்களாக 559 பாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. தலைவி தன் குடும்பத்தின் வறுமையை ஏற்று வழிநடத்துபவளாகவும், தன்மானத்தைக் காத்தும், இரப்போர்க்கு கொடுக்கின்ற மனப்பான்மை உடையவளாகவும், திகழ்ந்துள்ளதை அறியமுடிகின்றது. தலைவியின் வாழ்க்கையை ஆராயும்போது அன்று முதல் இன்று வரை மகளிர் வாழ்வியல் போற்றுதலுக்குரிய பண்பாக அமைந்திருப்பதை வெளிக்காட்டுகிறது. களவுக் காலத்தில் தலைவன் மீது கொண்ட காதலால் தலைவி மனத்தளவிலும், உடலளவிலும் பல்வேறு துன்பநிலைக்கு ஆளாகிறாள். மனம் களவுவாழ்க்கை வெளிப்பட்டுவிடுமோ என்ற பதற்றத்தில் பெரும் போராட்டத்தைத் தனக்குள்ளே நடத்தி, அதனை எதிர்கொள்வதைக் காணமுடிகின்றது. கற்பு வாழ்க்கையின் தொடக்கம் இல்வாழ்க்கை ஆகும். தலைவனின் துன்பத்தில் பங்கேற்றல், விருந்தோம்பல் மூலம் ஊடலை மறைத்தல் முதலானவை கற்புடையில் காணப்படுகிறது. கற்பொழுக்கத்தில் தலைவி உயர்வாக எண்ணப்பட்டிருப்பதையும் தலைவியை ஒழுக்கம் என்ற நிலைப்பாட்டிற்குள் வைத்துப் பேசப்பட்டுள்ளதையும் எடுத்துரைக்கின்றது சங்க காலத் தலைவி தன்னுடைய கற்பனையினால் அழகுக் கலைகளை அமைத்து அவற்றின் வாயிலாக அழகையும், உணர்ச்சியையும், இன்பத்தையும் காண்கின்றாள். அழகினை வெளிப்படுத்தும் நோக்கத்தை விடவும் சங்ககாலத் தலைவியின்

ஒப்பனைக் கலைத்திறன் பண்பாட்டு வெளிப்பாடாக அமைந்துள்ளது. மக்களிடம் சடங்குகளும் நம்பிக்கைகளும் இரண்டறக் கலந்தே காணப்பட்டது. சங்க காலத் தலைவி பல்வேறு நம்பிக்கைகளைக் கொண்டு காணப்படுவதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. கடவுள் நம்பிக்கை உடையவளாகவும், நல்லனவற்றையும் தீயனவற்றையும் அறிந்து அவற்றிற்கு ஏற்றார்போல் வாழ்க்கையை தீர்மானிக்கும் மாண்புடையவளான தலைவி பல்வேறு வகையான தொழில்களை மேற்கொண்டிருந்த செய்தியினை அகநூல்கள் வெளிக்காட்டுகிறது.

மேலாய்வு களங்கள்

- ✓ உளவியல் நோக்கில் களவுகாலத் தலைவியின் மாண்புகள்
- ✓ சங்ககாலத் தலைவியும் இக்காலப் பெண்களும் ஓர் ஒப்பீடு
- ✓ தொல்காப்பிய நோக்கில் சங்கத் தலைவியின் வாழ்வியல்
- ✓ மெய்யியல் நோக்கில் தலைவியின் வாழ்வியல்
- ✓ சமூகவியல் நோக்கில் தலைவியின் நிலம்சார் மாண்புகள்

ஆய்வுக் கட்டுரைகள்

வ.எண்	கட்டுரைத்தலைப்பு	ஆய்விதழ்	ஆண்டு
1	குறுந்தொகையில் சுற்றுச்சூழல் நுண்ணறிவு	தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்	தொகுதி – 6. அக்டோபர் - 2023 ப.எண் : 133 - 145
2	எட்டுத்தொகை அக இலக்கியங்களில் தலைவியின் சொல்லாற்றல	மணற்கேணி ஆய்விதழ்	தொகுதி – 1. மே 2024 ப.எண் : 55 - 59